YMCA

Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 13 [26-04-93] திங்கட்கிழமை ஓசை 67

## மக்கள் வங்கி நியமனம் வட-கிழக்கில் புறக்கணிப்பு

நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு பல வருடங்களாகியும் வடக்கு - கிழக்கு பகுதிக்கு மக்கள் வங்கியின் காரியாலய சேவகர் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப் படுகிறது. 1988 ஜுலை 30 ஆம் திகதி கொழும்பிலுள்ள மக்கள் வங்கியின் தலைமையகத்தில் இப்பதவிக்கான நேர் முகப்பரீட்சை நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது. ஆனால் ஏனைய பகுதி யிலிருந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு மேற்படி நியமனம் வழங் கப்பட்டுள்ள போதிலும் வடக்கு - கிழக்கிலிருந்து தோற்றியோருக்கு மட்டும் இதுவரை வழங்கப்படவில்லை. இதேவேளை [4ஆம் பக்கம் பார்க்க]

# கொழும்பில் கலவரம் வெடிக்கும் அபாயம்:

# அரசாங்கம் மீது சிங்கள மக்கள் சீற்றம்

## பாதுகாப்பிற்கு படைகள் விரைவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பில் கலவரம் வெடிக்கும் அபாயநிலை உருவாக்கியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. லலித்தின் மரணத்தைத் தொடர்ந்து கொழும்பில் லட்சக்கணக்கில் கூடியுள்ள ஆதரவாளர்கள் அரசிற்கெதிரான கோஷங்களை எழுப்பிவருவதாகவும் அரச கட்டடங்கள், அமைச்சர்களினதும், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரினதும் வீடுகள் கல் வீச்சிற்கு இலக்காகியதாகவும் மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் கருத்திற் கொண்டு மேலும் பெருமளவு இராணுவத்தினரும், கடற்படையினரும் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கேந்திர நிலையங்கள், சந்திகள் என் பனவற்றில் கூடாரங்கள் இட்டுத் தங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

அமைச்சர்கள் வீட்டிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் கள் வீடுகளுக்கு நேற்று முன் தினமிரவு இனந்தெரியாதவர் கள் கற்களை வீசி சேதப்படுத் தியதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

இதனால் முக்கிய நிலையங் களிலும் அரசாங்க கட்சி ஆத ரவாளர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் இராணுவப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட் டுள்ளது கேந்திர நிலையங்க ளில் தற்காலிக காவலரண்கள் அமைக்கப்பட்டு பொலிசாரும் இராணுவத்தினரும் காவலில் ஈடுபட்டுள்ளனர் என செய்தி கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரை நோக்கி கறுப்பு. வெள்ளை உடைகளு டன் பொதுமக்கள் வாகனங் களில் செல்வதாகவும் இனம் புரியாத அச்ச நிலை காணப் படுவதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

## அமைச்சர் இல்லங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

கொழும்பு நகரின் முக்கிய கேந்திர இடங்கள் மற்றும் அமைச்சர்களின் இல்லங்கள், தூதுவராலயங்கள் போன்ற இடங்களின் பாதுகாப்புப்பணி யில் இராணுவம் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாகவும், கொழும் பில் இனம்புரியாத பதற்றம் நிலவுவதாகவும் அவுஸ்திரே லிய வானொலி நேற்று நண் பகலில் தெரிவித்தது.

## லட்சக்கணக்கான மக்கள் தலைநகரில் திரட்சி

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலியின் பூதவுட லுக்கு லட்சக்கணக்கான மக் கள் திரண்டு சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனரென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரி விக்கின்றன.

இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக மைல் கணக்கில் வரிசை வரிசையாக மக்கள் காத்து நிற்பதையும் காணக் கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் தென்பகுதியின் பல் வேறு இடங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன என்றும் வீதிகளில் அஞ்சலி செலுத்தும் பதாகைகள் கட் டப்பட்டுள்ளன என்றும். தெரியவருகிறது. பெரும்பா லான மக்களின் முகங்களில்

# தொடர்பு சாதனங்கள் மீது

## லலித்தைச் சுட்டவரை வெள்ளைவான் ஏற்றியது

### நேரில் கண்டவர் விபரிப்பு

(கொழும்பு)

''சூடுபட்டு மேடையிலிருந்து கீழே விழுந்த கொலையாளியை வெள்ளைவான் ஒன்றில் வந்தவர்கள் ஏற்றிச் சென்றதைக் கண்ணால் கண்டேன்'' எனக் கூட்ட மேடையிலிருந்த சட்டத்தரணிமகிந்த அமரசேகர தெரிவித்துள்ளார்.

''லலித் அத்துலத்முதலி மேடையில் பேசிக்கொண்டிருந்தபோது மேடை மீது ஏறி அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரை நோக்கி லலித்தின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிப் பிரயோகம்செய் தனர். இதனால் காயமடைந்த துப்பாக்கி நபர் மெய்ப் பாதுகாவலரை நோக்கித் துப் பாக்கிப் பிரயோகம் செய்த வாறு மேடையிலிருந்து விழு ந்து நிலத்தில் உருண்டுசென் றார். அப்பொழுது வெள்ளை வானொன்றில் வந்தவர்கள் அவரை அந்த வானில் ஏற்றிச் சென்றதை எனது கண்ணால் கண்டேன்'' என அச்சட்டத் தரணி தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

## இறந்த இளைஞர் சடலத்தில் சயனைட் ஊசி ஏற்றப்பட்டது!

### வைத்திய அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

கிருலப்பனை கூட்டுறவுச்சங் கத்திற்கண்மையிலிருந்தஇளை ஞரின் சடலத்தை தமது கட்சி உறுப்பினர் எவரும் அடை யாளம் காட்டவில்லை என வும், பொலிசாரின்கூற்று உண் மைக்கு முரணானது எனவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன் னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா நேற்று செய்தியாளருக்குத் தெரிவித் தார்.

தமது கட்சி அங்கத்தவர் திரு ஏ. ஜே. பிரேமதாச சட லத்தை அடையாளம் காட்டிய தாக பொலிசார் தெரிவித் தமை மக்களை ஏமாற்றமுற்

## தமிழ் இளைஞனின் கொலை சதியின் இரண்டாம் கட்டம்

லக்தீப ஆசிரியர் விளிஎத்திகொட

(கொழும்பு)

கிருலப்பனையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் இளைஞனின் சடல விவகாரம் சதிகாரர்க

இதுபற்றி அவர் விபரிக்கையில்; கிருலப்பனையில் இருந்த தமிழ் இளைஞனுடைய சட லம் தொடர்பாக அரச தொ

அமைச்சர்கள் வீட்டிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் வீடுகளுக்கு நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்கள் கற்களை வீசி சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முக்கிய நிலையங்களிலும் அரசாங்க கட்சி ஆதரவாளர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் இராணுவப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது கேந்திர நிலையங்களில் தற்காலிக காவலரண்கள் அமைக்கப்பட்டு பொலிசாரும் இராணுவத்தினரும் காவலில் ஈடுபட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரை நோக்கி கறுப்பு. வெள்ளை உடைகளுடன் பொதுமக்கள் வாகனங்களில் செல்வதாகவும் இனம் புரியாத அச்ச நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் இல்லங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

கொழும்பு நகரின் முக்கிய கேந்திர இடங்கள் மற்றும் அமைச்சர்களின் இல்லங்கள், தூதுவராலயங்கள் போன்ற இடங்களின் பாதுகாப்புப்பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், கொழும்பில் இனம்புரியாத பதற்றம் நிலவுவதாகவும் அவுஸ்திரேலிய வானொலி நேற்று நண்பகலில் தெரிவித்தது.

# தொடர்பு சாதனங்கள் மீது சிங்களவர் ஆவேசம்

(கொழும்பு)

அரசசார்பு செய்தி தொடர்பாளர்களாகிய ரூபவாகினி படப்பிடிப்புக் குழு, இலங்கை வானொலிக் குழு, ஏரிக்கரைப் பத்திரிகையாளர் குழு என்பன நேற்றுக் கல்வீச்சுக்கு இலக்காகி ஓட்டம் எடுத்தனர் எனத் தெரியவருகின்றது.

லலித்தின் உடல் மருத்துவமனையிலிருந்து தனியார் அந்திமகால நிலையத்திற்குக் கொண்டு செல்லும் போது செய்தி சேகரிப்பு மற்றும் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த இக்குழுவினர் அங்குநின்ற பொது மக்களின் கல்வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது ஓட்டம் எடுத்தனர். அங்கு அரசஎதிர்ப்புக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இதேவேளை தனியார் அந்திமகால நிலையத்தில் இருந்து அத்துலத் முதலியின் உடல் அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வழியில் பொதுமக்கள் குழுமிநின்று அரச எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமைதி பேணுமாறு திருமதி லலித் கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின்ஆதரவாளர்கள் தொண்டர்கள் அமைதியைப பேணுமாறு லலித்தின் பாரியார் திருமதி ஸ்ரீமனி லலித் அத்துலத்முதலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கடிதத்தைக் காட்டியவர் லலித் மீது சுட்டார்

### கூட்ட அறிவிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியைச் சுட்ட துப்பாக்கி நபர் கறுப்பு நிற சேட், காற்சட்டைஅணிந்திருந்தார் என்றும், சாதாரண உயரம், மெலிந்த உடல், பொதுநிறம் உடையவர் என்றும் அத்துலத்முதலி கலந்து கொண்ட கூட்டத்தின் அறிவிப்பாளர் நந்தன குமாரசீல தெரிவித்தார்.

லலித் சுடப்படும்போது தான் அவர் நின்ற இடத்தில் இருந்து மூன்று அடி தூரத்தில் இருந்ததாகத் தெரிவித்த அவர், கடிதம் ஒன்றை லலித்திற்கு காட்டியவாறே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக மேலும் தெரிவித்தார்.

## லலித் கொலையில் புலிகளுக்கு தொடர்பில்லை

### லண்டன் செயலகம அறிக்கை

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி கொலைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகள் நேற்று லண்டனில்விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## லட்சக்கணக்கான மக்கள் தலைநகரில் திரட்சி

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு லட்சக்கணக்கான மக்கள் திரண்டு சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனரென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக மைல் கணக்கில் வரிசை வரிசையாக மக்கள் காத்து நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் தென்பகுதியின் பல்வேறு இடங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன என்றும் வீதிகளில் அஞ்சலி செலுத்தும் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன என்றும், தெரியவருகிறது. பெரும்பாலான மக்களின் முகங்களில் சோகம் தெரிவதாகவும், வாகனங்களும் வெள்ளைக் கொடியுடன் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்தாகவும் கூறப்படுகிறது. அஞ்சலி செலுத்துவதற்காக கொழும்பை நோக்கி இன்றும் நாளையும் மேலும் மக்கள் கூட்டம் வந்தடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சடலமாக மீட்கப்பட்ட இளைஞரே சுட்டாராம்

### பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

கிருலப்பனை கூட்டுறவுச் சங்கக் கிளையின் அருகிலுள்ள குப்பை மேட்டில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டஅப்பையா பாலகிருஷ்ணன் (23) என்பவரே லலித் அத்துலத்முதலியை சுட்டுக்கொன்ற நபர் என கிருலப்பனை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அமைப்பாளர் ஏ. ஜே. பிரேமதாஸ அடையாளம் காட்டியுள்ளதாக பொலிசார் நேற்று அறிவித்தனர்.

இறந்து கிடந்தவர் காணப்பட்ட இடத்துக்குச் சென்ற மேற்படி கட்சியின் அமைப்பாளர் இறந்தவரே தமது தலைவரைச் சுட்டவர் என அடையாளம் காட்டியதாகவும் அவரது முகத்தை தாம் மேடையில் தெளிவக மின்னொளியில் பார்த்ததாகவும் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறியதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது.

இறந்து கிடந்த இளைஞரின் வாயில் நுரை தள்ளியிருந்ததாகவும் இவர் சயனைட் அருந்தியே இறந்ததாகவும் மரண விசாரணை நட

(4 ஆம் பக்கம் பார்க்க)

லலித் கொலை சம்பவம்

## தேர்தலை ஒத்திவைக்க போதுமான காரணமல்ல

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த சம்பவமானது மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்கபோதுமான காரணம் அல்ல என்று தேர்தல் ஆணையாளர் சந்தானந்த டி.சில்வா கூறியுள்ளார்.

## யார் கொலைக்கு உடந்தை மக்கள் உணர்வர்

### சு. க. உறுப்பினர் தெரிவிப்பு

முக்கிய அரசியல் தலைவர் ஒருவரின் கூட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமை மிகவும் கண்டிக்க வேண்டிய ஒரு விடயம். இதிலிருந்து யார் கொலையாளிக்கு உடந்தையாக இருந்தனர் என்பதை மக்கள் உணர்ந்துகொள்வர் என நுவரெலியா,மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் எஸ். பீ. திசாநாயக்க தெரிவித்தார்.

ஒன்றில் வந்தவர்கள் ஏற்றிச் சென்றதைக் கண்ணால் கண்டேன்'' எனக் கூட்ட மேடையிலிருந்த சட்டத்தரணிமகிந்த அமரசேகர தெரிவித்துள்ளார்.

''லலித் அத்துலத்முதலி மேடையில் பேசிக்கொண்டிருந்தபோது மேடை மீது ஏறி அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரை நோக்கி லலித்தின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். இதனால் காயமடை

றார். அப்பொழுது வெள்ளை

தெரிவித்துள்ளார்.

## தமிழ் இளைஞனின் கொலை சதியின் இரண்டாம் கட்டம்

### லக்தீப ஆசிரியர் வினிஎத்திகொட

(கொழும்பு)

கிருலப்பனையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் இளைஞனின் சடல விவகாரம் சதிகாரர்களின் இரண்டாவது நடவடிக்கை என லத்தீப ஆசிரியர் விணி எத்திகொட பி. பி.சிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் விபரிக்கையில்; கிருலப்பனையில் இருந்த தமிழ் இளைஞனுடைய சடலம் தொடர்பாக அரச தொடர்பு சாதனங்கள் பெரிய முக்கியத்துவம் கொடுக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த இளைஞர் சடலத்தில் சயனைட் ஊசி ஏற்றப்பட்டது!

### வைத்திய அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

கிருலப்பனை கூட்டுறவுச்சங்கத்திற்கண்மையிலிருந்தஇளைஞரின் சடலத்தை தமது கட்சி உறுப்பினர் எவரும் அடையாளம் காட்டவில்லை எனவும், பொலிசாரின்கூற்று உண்மைக்கு முரணானது எனவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா நேற்று செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

தமது கட்சி அங்கத்தவர் திரு ஏ. ஜே. பிரேமதாச சடலத்தை அடையாளம் காட்டியதாக பொலிசார் தெரிவித்தமை மக்களை ஏமாற்றமுற்படும் நடவடிக்கை என்றும், தமது கட்சி அங்கத்தவர் தன்னுடைய நிலையை உறுதிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் சிந்திக்கத் தவறின் ஜனநாயகத்திற்கு சாவுமணி

### - வாசுதேவ நாணயக்காரா

(கொழும்பு)

இலங்கை மக்கள் சிந்தித்து செயல் படாது விட்டால் சகல ஜனநாயகமுறைக்கும் சாவுமணி அடிக்கப்பட்டுவிடும். எனவே ஜனநாயகத்தை காப்பாற்ற மக்கள் முன்வரவேண்டும் என நவ லங்காசமசமாஜ கட்சி தலைவர் வாசுதேவ நாணயக்காரா தெரிவித்தார்.

ஜனநாயகத்தை அழிவில் இருந்து காக்க வேண்டிய பாரிய நிலையில் இன்று இலங்கைமக்கள் இருக்கின்றார்கள்இலங்கையில்எதிர்வரும் காலத்தில்ஜனநாயகம்நிலவும்என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலையில் இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் இல் மாக்கோஸ்சுக்குஎதிராகஅகினோமக்கள் புரட்சி மேற்கொண்டு ஆட்சியை கைப்பற்றியதுபோல் நாமும் ஜனாதிபதிக்கு நெருக்கடிகளை கொடுத்து அவரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் அதிரடி; நான்கு பொலிசார் பலி

## ஆயுதங்களும் மீட்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மின்னல் வேக அதிரடி ஒன்றில் நான்கு சிறிலங்கா பொலிசார் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம்மோதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையாரடி பொலிஸ் நிலையத்திலிருந்து வெலிக்கந்தை நோக்கி ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலிசாரே புலிகளின் தாக்குதலுக்குப் பலியானவர்களாவர் ரோந்து வந்த ஐந்து பொலிசார் மீது புலிகள் நேற்றுக் காலை 7-45 மணியளவில் மேற்கொண்ட இம் மின்னல் வேகத் தாக்குதல் இரண்டு நிமிடங்கள் மட்டுமே இடம் பெற்றது.

நான்கு பொலிசார் கொல்லப்பட்ட இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு

★ ரி-56 1 துப்பாக்கிரக— 04
★ வோக்கி டோக்கி — 01
★ ரி-56 ரவைக் கூடு — 16
★ ஏ.கே. கோல்சர் — 04
★ ஜே. ஆர்.குண்டு — 01
★ ஐ. எம். ரவைகள் — 324
★ தொப்பி — 02

## வரி விளம்பரம்

### ஒத்து மாறல்

நுவரெலியா மாவட்ட விவசாய ஆசிரியர் யாழ் மாவட்ட சாவகச்சேரி கோட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். உடன் தொடர்பிற்கு — பூ அகம், மீசாலை தெற்கு, மீசாலை. (3394)

### முத்தாமணக்கம் விதை

முத்தாமணக்கு பணம் பெருக்கும் சிறந்த எண்ணெய்ப் பயிர். உச்சப் பயன் தரும் வர்க்க விதை பக்கற் ஒன்று ரூ. 5/. 'மில்க்வைற்.' (சி-6491)

### விற்பனைக்கு

A60 வான், மொறிஸ் ஒக்ஸ்போட் கார் மறுசீர் அமைக்கப்பட்ட ஒக்ஸ்போட் டீசல் எஞ்சின்களுடன் விற்பனைக்கு உண்டு. ஜீப் கட் 600X14 ரயர் ரியூப் 600X12 ரயர் ரியூப். ஜெனரல்மோட்டோஸ் ''வளர்மதி'', 10 பரமேஸ்வரா சந்தி. (4760)

### அமெரிக்கா பணம் செலுத்தும்

இலங்கைக்கு அமெரிக்க ஆயுதப்படைகள் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சம் ரூபாவை செலுத்த வேண்டியிருப்பதாக கூறப்படுகின்றது. இலங்கையின் வான் எல்லையை பயன்படுத்தியதற்கான கட்டணமாக அமெரிக்க ஆயுதப்படைகள் விமான நிலைய விமான சேவைகள் லிமிட்டெட் நிறுவனத்திற்கு இத்தொகையை செலுத்த வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### கசிப்பு பிடிபட்டது

(மல்லாகம்)

ஏழாலை மயிலங்காடுப் பகுதியில கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த மையமொன்று சுன்னாகம் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது ஒரு பரல் கசிப்பு பிடிபட்டுள்ளது. ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (09)

### மாணவர் தலைவர் கடத்தப்பட்டார்

[கொழும்பு]

சுதேச மாணவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர

## செஞ்சிலுவை உயரதிகாரி யாழ். வந்து சேர்ந்தார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி டொமினிக் டெரேடா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இவர் யாழ்ப்பாண வதிவிட பிரதிநிதியுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார் என்றும் இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாண கிளையின் உயர் அதிகாரியுடன் பேச்சுவார்த்தையை நடத்தியதுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவர் இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்ட இடத்தையும் சென்றுபார்வையிட்டார் என தெரிய வருகின்றது

## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

(சி-6439)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**சேலுப்பிள்ளை கந்தசாமி**

தோற்றம் 27-06-1927 — மறைவு 27 03-1993

உங்கள் உயிரை மீட்பதற்கு
உயர்தர மருத்துவத்துக்கு சென்றோம்
விதி சதி செய்து விட்டது

## உப உணவு விவசாயிகளுக்கு அமோனியம் சல்பேற்று

[தொல்புரம்)

உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அமோனியம் சல்பேற்று உரம் வழங்கப்படவுள்ளது.

உப உணவுப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்துள்ள விவசாயிகள் தமது தேவைக்கேற்ற அளவை உறுதிப்படுத்தி உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என தொல்புரம் கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் உரக்களஞ்சியத்தில் தேவையான அளவு அடிக்கட்டு உரம் உள்ளதெனவும், கமநல சேவை நிலையங்களில் கையிருப்பில் விற்பனைக்காக உள்ளதெனவும், அமோனியம் சல்பேற்று உரம் அண்மையில் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டதெனவும் அறியவருகிறது. [41)

### மாணவர்க்கு மின்சாரம்

(தென்மராட்சி]

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எரிபொருள் விலை ஏற்றம் காரணமாக இரவில் வீட்டில் படிக்க வசதியின்மையால் பாடசாலையில் தினமும் இரவு 7மணி முதல் 9 30வரை மின்வழங்கி இயந்திரம் (ஜெனரேற்றர்] மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. [86]

### பாடசாலைகள் திறக்கப்படும்

''கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் யாவும் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பமாகிறது. ஆசிரியர்கள் அதிபர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்று கடமையை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 01 — 1918




உதிர்வு: 27 — 03 — 1993

**ஜோசேப் அன்ரன்**

இளவாலை பத்தாவத்தையை பிறப்பிடமாகக் கொண்ட பாத்தலோமேயு ஜோசேப் அன்ரன் 27-3-93 அன்று இளவாலையில் காலமானார். இவர் கரம்பனைச் சேர்ந்த கிளமன் புஸ்பம் என்பவரின் அன்புக் கணவரும், ஏஞ்சல், விமலா, மரியதாஸ், அருட்சகோதரி டெலாறோஸ், யேசுதாஸ், சிசிலியா, சிறில்லா, அமலசிறி, தேவதாஸ், நற்கருணைதாஸ் என்பவர்களின் அன்புத் தந்தையுமாவார். இவரது ஆன்மசாந்திக்காக எதிர்வரும் 27-4-93 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்
இவர் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,

## பிறந்த நாள் வாழ்த்து



**★ செல்வி ஈழவாணி ★**

புளியங்கூடலைச் சேர்ந்த தர்மராஜா தயாநிதி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஈழவாணி தனது முதலாவது பிறந்த நாளை 26.04.93 இன்று கல்வியங்காடு அலன் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, துபாக்கா, அகிலாக்கா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், உருத்திரபுரத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கொழும்பில் வசிக்கும் வீரசிங்கம் பாட்டா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அம்பாளின் அருள் பெற்று பல்கலைகளும் கற்றுப்பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(4746)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-26

டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கசிப்பு பிடிபட்டது

(மல்லாகம்)

ஏழாலை மயிலங்காடுப் பகுதியில கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த மையமொன்று சுன்னாகம் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது ஒரு பரல் கசிபபு பிடிபட்டுள்ளது. ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

(09)

## மாணவர் தலைவர் கடத்தப்பட்டார்

[கொழும்பு]

சுதேச மாணவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாணவன் ஒருவன் இனம் தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவன் புறக்கோட்டையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார்.

இவர் திமுக்துகுமார வென்னப்புவவைச் சேர்ந்தவர் எனவும், ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்குத் தலைமை வகித்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வி.கழகங்களுக்கு ஊக்குவிப்பு பணம்


யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட பதினேழு விளையாட்டுக் கழகங்களுக்கு யாழ். உதவி அரசங்க அதிபரினால் ஊக்குவிப்புத் தொகை ரூபா ஐந்நூறு (500/ ) வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை குருநகர் பாடுமீன்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டது.

(17)

## சென். அன்ரனிஸ் வெற்றி

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்துக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 3 — 1 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை தட்டிச் சென்றது.

(17)



அமரர்

## சேலுப்பிள்ளை கந்தசாமி

தோற்றம் 27-06-1927 — மறைவு 27 03-1993

உங்கள் உயிரை மீட்பதற்கு
உயர்தர மருத்துவத்துக்கு சென்றோம்
விதி சதி செய்து விட்டது
கந்தன் அருளால் கந்தசாமி என்னும் நாமம்
கலங்கரை ஒளிபோல் வாழ்ந்து
கலங்க விட்டு விட்டு சென்றாயோ.

26-04-1993 (இன்று) திங்கள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் மேற்கு,
கல்லுவம். — குடும்பத்தினர்

(4758)

## ஜோசேப் அன்ரன்

இளவாலை பத்தாவத்தையை பிறப்பிடமாகக் கொண்ட பாத்தலோமேயு ஜோசேப் அன்ரன் 27-3-93 அன்று இளவாலையில் காலமானார். இவர் கரம்பனைச் சேர்ந்த கிளமன் புஸ்பம் என்பவரின் அன்புக் கணவரும், ஏஞ்சல், விமலா, மரியதாஸ், அருட்சகோதரி டெலாறோஸ், யேசுதாஸ், சிசிலியா, சிறில்லா, அமலசிறி, தேவதாஸ், நற்கருணைதாஸ் என்பவர்களின் அன்புத் தந்தையுமாவார். இவரது ஆன்மசாந்திக்காக எதிர்வரும் 27-4-93 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்
இவர் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

துயரில் பங்கு கொடுக்கும்,
கார்மேல் அருட்சகோதரிகள், பங்குக்குரவர்.

கார்மேல் அலையகம்
தாளையடி.

(4756)

இவரை அப்பா, அம்மா, துபாக்கா, அகிலாக்கா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், உருத்திரபுரத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கொழும்பில் வசிக்கும் வீரசிங்கம் பாட்டா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அம்பாளின் அருள் பெற்று பல்கலைகளும் கற்றுப்பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(4746)

# அறிவித்தல்

## யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாலர் பாடசாலைகளின ஆசிரியர்களுக்கும் !

பாலர் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் தொடர்பான ஆரம்பக்கூட்டம் பின்வரும் இடங்களில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள திகதிகளில் காலை 10 மணிக்கு நடைபெறும்:-

| நலன்புரிக் கூட்டுறவுச் சங்கப் பிரிவு | கூட்டம் நடைபெறும் திகதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01. வடமராட்சி | 93. 05. 02 | தேவரையாளி இந்துக்கல்லூரி. |
| 02. வடமராட்சி கிழக்கு | 93. 05. 05 | நாகர்கோவில்அ மி. கலவன்பாடசாலை. |
| 03. யாழ்ப்பாணம் – நல்லூர் | 93. 05. 05 | யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம். |
| 04. வலிகாமம் கிழக்கு – வலிகாமம் வடக்கு | 93. 05. 05 | யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம். |
| 05. வலிகாமம மேற்கு ) வலிகாமம் தென்மேற்கு );- வலிகாமம் தெற்கு ) | 93. 05. 05 | யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம். |
| 06. தென்மராட்சி | 93. 05. 05 | நகரசபை, சாவகச்சேரி. |

இம்மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்ற அனைத்துப் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் அனைவரையும், தத்தம் பிரிவில் நடைபெறும் இவ்வாரம்பக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்பபாணம். 93 04. 23

(சி6502)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-26

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - கும்புறுப்பிட்டிப பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அலெக்ஸ் (கந்தையா ஜெயக்குமார் - அலஸ்தோட்டம் சாம்பல்தீவு - திருமலை)

ரகீம் (த. குணரட்ணம் - சாம்பல்தீவு - திருமலை)

1987ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2–ம் லெப். சபேசன் (அன்ரன் குரன்ஸ் ஆரன்ஸ்- 6-ம் வட்டாரம், சாம்பல்தீவு, மூதூர் - திருமலை)

திருமலை - மூதூர் - பட்டித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவததினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு யாழ் - ஊர்காவற்றுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் வீரச்சாவெய்திய-

குட்டி/ரமேஸ் (மாணிக்கம் ரவீந்திரன் - புத்தூர் மேற்கு - யாழ். )

யாழ் - குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். தியாகு [ஆழ்வாப்பிள்ளை தர்மராசா- குச்சவெளி - திருமலை]

1992ஆம் ஆண்டு மட்டு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

பாலுமகேந்திரா [கணபதிப்பிள்ளை உருத்திரா - ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று- அம்பாறை]

கப்டன் செல்லையா/நித்தி [இராசையா நித்தியானந்தன் - மஞ்சத்தொடுவாய் - மட்டு. ]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6501]

சிந்தனைக்கு

நரி உபதேசம் செய்யும்போது, உனது கோழிகளை எண்ணிப் பார்த்துக்கொள்.

ஜெர்மன் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## கதைவிடும் பிரேமா!

சிறிலங்கா ஜனாதிபதி நன்கு கதை கூற வல்லவர். பேச்சாற்றல் மிக்க அவர், கூறும் கதைகளே சிங்கள வாக்காளர்களைக் கவர்ந்திழுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக அவர் தான் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகள், கூட்டங்கள் என்பவற்றில் கதை கூறாமல் விடுவதில்லை. அதிலும் பௌத்த மத வரலாற்றில் இருந்து அவர் கூறும் கதைகள் தன்னை ஒரு பௌத்தத்தின் காவலனாகவும், பௌத்த மதத்தின் சிந்தனைவாதியாகவும் காட்டுவதினால் அவர் பெரும் வாக்குகளைக் குவிக்கக் கூடியதாக வுள்ளது.

இவ்வாறாக மக்களுக்கு கதை கூறிப் பழக்கப்பட்ட திரு. பிரேமதாசா இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் கதையே கூறி வருகின்றார். சர்வ கட்சி மாநாடு எனவும் பாராளுமன்றத் தெரிவுக் குழு எனவும் அவர் கூறும் கதைகள் இதிகாசக் கதைகள் போன்றே 'காலம் கடந்தவையாக' தற்பொழுது நின்று நிலைக்கின்றன. சர்வ கட்சி மாநாட்டுடன் இரண்டு வருடங்களைக் கடத்திய பிரேமதாசா தற்பொழுது தெரிவுக்குழு என சுமார் இரண்டு வருடங்களை 'வெற்றிகரமாக' நெருங்கிக் கொண்டிருக்கின்றார்.

ஒவ்வொரு புத்தாண்டின் போதும், தனதுபதவி ஏற்பு வைபவத்தின் போதும் இனப்பிரச்சினைக்கு இந்த ஆண்டின் இறுதிக்குள் தீர்வு காணப்படும் எனத் தெரிவிக்கும் திரு. பிரேமதாசா இறுதியாக கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான பாராளுமன்ற கூட்டத் தொடர்ரை ஆரம்பித்து வைத்துப் பேசும் போதும், இவ்வாண்டின் இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் எனவும் இதற்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழு தனது தீர்வுத் திட்டத்தை விரைவுபடுத்தி சமர்ப்பித்து உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், இது சாத்தியமாகக் கூடியதல்ல என்பது குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு தெரியாததல்ல. ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி மக்களுக்குக் 'கதை' விடுகின்றார். வழமைபோலவே தனது ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு அவர் கதை சொல்கிறார். அவ்வாறு இல்லாவிட்டால் பின்வரும் கேள்விக்கு அவர் பதில் சொல்லத்தான் வேண்டும். இனப்பிரச்சினையை அவரால் தீர்க்க முடியும் என்றால் அவர் பதவிவகித்துள்ள சுமார் நாலரை வருடங்களாக என்ன செய்கிறார்? ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை உறுதி மொழிகளை வழங்கினார். ...

# எம்மைவிட்டு சென்றோர்க்கு நரகமே கிடைக்கும்

## ஜனாதிபதி பிரேமதாசா உரை

(கொழும்பு)

''எம்மோடுஇருப்பவர்களுக்கு உயர்ந்த இடம் கிடைக்கும். எம்மைவிட்டு சென்றவர்களுக்கு நரகமே கிடைக்கும்'' என்று கூறியுள்ளார் ஜனாதிபதி பிரேமதாசா.

ருவான்வெல்லையில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலையை கடந்த வாரம் பார்வையிட்ட ஜனாதிபதி அதன்பின்னர் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ''1956இல் ருவான் வெல்ல தொகுதியில் ஐ. தே. க அபேட்சகராக போட்டியிட்டபோது எனக்கு ஆதரவளித்த இளைஞரான யூ.எல். எம். பாரூக் இன்று எனது அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருப்பதைக் காணும்போது பெருமகிழ்ச்சி ஏற்படுகின்றது எம்மோடு இருப்பவர்களுக்கு இப்படியான இடமே கிடைக்கும். எம்மைவிட்டு சென்றவர்களுக்கு நரகமே கிடைக்கும்'' என ஜனாதிபதி பிரேமதாசா அப்போது குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தல்

## 50 கூட்டங்களில் பேச பிரேமா திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசாரத்தை முன்னிட்டு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஐம்பது பொதுக் கூட்டங்களில் பேச இருக்கின்றார் ஐ.தே க. யின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் இன்று மாலை கண்டியில் இடம்பெறவுள்ளது.

எனினும் எதிர்வரும் ஐந்தாம் ஆறாம் திகதிகளில் வெசாக் பண்டிகை வருவதை முன்னிட்டு தேர்தல் பிரசாரங்கள் அத்தினங்களில் பெருமளவில் இருக்காது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அமைதியான அஞ்சலிக்கு காமினி கோரிக்கை

(கொழும்பு)

நடைபெற்றசம்பவங்களுக்கு ஜனநாயக முறையிலேயே பதிலளிக்கவேண்டும் என ஜனநாயக ஐக்கியதேசியமுன்னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

எனவே மக்கள் அமைதியாக இருந்து மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## ஜே. ஆர். துணிவுடைய அரசியல்வாதி

பிரேமா புகழாரம்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா கடுமையான முடிவுகளைக்கூட அச்சமின்றி எடுக்கக்கூடிய துணிவு மிக்க அரசியல்வாதி என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஜெயவர்த்தனா அரசியலில் பிரவேசித்து 50 வருட பூர்த்தி விழா அண்மையில் களனியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி பிரேமதாசா, ஜெயவர்த்தனா கட்சிக்கு புத்துயிர்ப்பு கொடுத்தவர். பொருளாதார அபிவிருத்திக்கு புத்தூக்கமளித்தவர் என்றும், அவரால் அறிமுகப்படுத்தப்பட்டபொருளாதாரக் கொள்கையையே அறிமுகப்படுத்துகின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

## நட்டஈடு வழங்க ரெபியாவிற்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத இடங்களுக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படக் கூடாது என ரெபியா நிறுவனத்திற்கு பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நட்டஈடு வழங்கினால் மீண்டும் அங்கு நட்டஈடு வழங்கும் சூழ்நிலை உருவாகலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### உதவித்தொகை பெறுவோர்

[யாழ்ப்பாணம்]

அடுத்த மாத நடுப்பகுதியில் 1991-92 கல்வியாண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ''உதவிப் பணக் கொடுப்பனவுக்கு'' தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 1991-92 கல்வியாண்டில் துணைவேந்தர் நலநிதியத்திற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [05[

### சேவை பாராட்டு

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கூடிய வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்ற சங்கத்தின் 9 ஊழியர்களுக்கு சங்கத்திற்கு ஆற்றியசேவையைப் பாராட்டி சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்நலன்புரிச் சங்கத்தினர் நேற்று முன்தினம் சங்கத்தில் பாராட்டு விழா ஒன்றை நடத்தினர். (86)

### வெளியீடு

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ''நாவுக்கரசன்'' என்னும் பெயருடைய கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

புங்குடுதீவு, ஊர்காவற்றுறை

## க.பொ.த.(சா.) மாணவருக்கு பெறுபேறு இன்னும் இல்லை

1992ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை முடிவுகள் வெளியாகிய போதும் பல தனியார் பரீட்சார்த்திகளுக்கும் புங்குடுதீவு கொத்தணி ஊர்காவற்றுறைக் கொத்தணி, மற்றும் வேலணைக் கொத்தணி உட்பட உடுத்துறைகொத்தணியின்சில பாடசாலைகளுக்கும் இன்னும் முடிவுகள் கிடைக்கவில்லை என தெரியவருகின்றது.

இது தொடர்பாக பரீட்சை எடுத்த பல மாணவர்கள் பாடசாலை அதிபர்களும் கல்வி திணைக்களத்தில் வந்து கேட்டு ஏமாற்றம் அடைந்து செல்வதை காணக்கூடியதாக வுள்ளது. இந்த தவணையில் க. பொ. த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாகும். இவ்வேளை மாணவர் தமது உயர் கல்வியை தொடர முடியாமல் பல இன்னல்களை எதிர்கொள்ளுகின்றனர்.

இது தொடர்பாக கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் பரீட்சார்த்திகள்கேட்டபோது அதிகாரிகள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்ப வேண்டிய பொதிகள் தவறுதலாக வேறு மாவட்டத்திற்கு சென்றுள்ளதாக கூறியுள்ளனர்.

ஆனால் யாழ். மாவட்டத்திற்கு வரவேண்டிய பரீட்சை பெறுபேறுகளை யாழ் கல்வித் திணைக்களஅதிகாரியொருவர் கொழும்பில் இருந்து கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (பா)

## வடமராட்சியில் இரு விமானங்கள் நோட்டம்

(வடமராட்சி)

குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வடமராட்சிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து சில மணிநேரம் வட்டமிட்டு நோட்டமிட்டது.

அவ்ரோ விமானத்துடன் இன்னொரு குண்டு வீச்சு விமானமும் இணைந்து நெல்லியடி, உடுப்பிட்டி, திக்கம் பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்ட பின்னர் பலாலிப் பகுதியை நோக்கி விரைந்தன. அதேவேளை வடமராட்சி வடக்கு கடற்பரப்பிலும் சிறிலங்கா அரசாங்கத்திற்குச் சொந்தமான பாரிய கடற்படைக் கப்பல் ஒன்றும் மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடுநிகழ்த்தியவாறு சென்றது. (யோ)

நோயாளர் நலன்புரிச்சங்கத்திற்கு

## உந்து இழுவை வண்டி லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழகத்தால் யாழ் போதனா வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு பூதவுடல் கொண்டு செல்லும் உந்து இழுவை வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு லயன்ஸ் கழகத்தின் சார்பில் அதன்வட பிராந்திய தலைவர் லயன் செ. சி. இராமகிருஷ்ணன் அவர்கள் கடந்த 18ஆம் தேதி ஞானம்ஸ் ஹோட்டலில் நடந்த பிராந்திய மாநாட்டில் யாழ் போதனா வைத்திய சாலை நோயாளார் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பாளரிடம் சம்பிரதா பூர்வமாக இவ் வண்டியை கையளித்தார்.

### புலமைப்பரிசில் சித்தி

யாழ்.மண்டைதீவு மகாவித்தியாலய மாணவி சிவபரஞ்சோதி நிசாந்திஎன்பவர் 1991 ஆம் ஆண்டு விசேட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி 136 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பெற்றுள்ளார்.

### சேவை பாராட்டு

(தென்மராட்சி)

கச்சாய் உபதபாலகத்தில் தபாலக அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ம. சின்னையா அவர்களுக்கு அண்மையில் கொடிகாமம் தபாலகத்தில் தபாலக அதிபர் திரு. க. ஞானலிங்கம் தலைமையில் அவரதுசேவையைப் பாராட்டி சேவை நலன் பாராட்டுவிழா இடம்பெற்றது. (86)

## லண்டனில் ஒரே நாளில்

எனத் தெரிவிக்கும் திரு. பிரேமதாசா இறுதியாக கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான பாராளுமன்ற கூட்டத் தொடர்ரை ஆரம்பித்து வைத்துப் பேசும் போதும், இவ்வாண்டின் இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் எனவும் இதற்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழு தனது தீர்வுத் திட்டத்தை விரைவுபடுத்தி சமர்ப்பித்து உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், இது சாத்தியமாகக் கூடியதல்ல என்பது குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு தெரியாததல்ல. ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி மக்களுக்குக் ‘கதை’ விடுகின்றார். வழமைபோலவே தனது ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு அவர் கதை சொல்கிறார். அவ்வாறு இல்லாவிட்டால் பின்வரும் கேள்விக்கு அவர் பதில் சொல்லத்தான் வேண்டும். இனப்பிரச்சினையை அவரால் தீர்க்க முடியும் என்றால் அவர் பதவிவகித்துள்ள சுமார் நாலரை வருடங்களாக என்ன செய்கிறார்? ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை உறுதி மொழிகளை வழங்கினார். கடந்த ஆண்டு இறுதிக்குள் இனப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றார்.

ஆனால், அது நடந்ததா? இனப்பிரச்சினையை அவரால் தீர்க்கமுடிந்ததா? முடியவில்லை. ஆனால், மீண்டுமொருமுறை அடுத்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

உண்மையில். சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினையின் அடிப்படையை ஏற்க மறுக்கின்றார். பிரச்சினையை பேசித் தீர்க்கக்கூடிய போராட்ட சக்திகளை அணுக மறுக்கின்றார். அத்தோடு, யதார்த்தத்தை கணிப்பீடு செய்து பிரச்சினையை தீர்க்க முற்படுவதாக இல்லை. இந்நிலையில், தமது ஆட்சி அதிகாரத்தை காப்பாற்றிக்கொள்ள ‘கதை’ விடுகின்றார். இதன்மூலம், சிங்களவரை திருப்திப்படுத்த முற்படுகின்றார்.

ஆனால், அரசியல் வாதிகள் இவ்வாறெல்லாம் ‘கதை’ விடுவது என்பது சாதாரணமானதொன்று. ஆனால், இதனை அரசாங்க அதிகாரிகளும் ஏற்றுக் கொண்டு மக்களுக்கு கதை கூறுவதுதான் ஆச்சரியமானது. அண்மையில் இலங்கை வங்கி வெளியிட்டுள்ள ‘‘சிறிலங்காவின் பொருளாதாரம்’’ பற்றிய ஓர் அறிக்கையில் ‘‘அரசு மேற்கொண்டு வரும் இராஜதந்திர மற்றும், இராணுவ நடவடிக்கைகளினால் இவ்வாண்டில் இவ் யுத்தம் ஒருமுடிவுக்கு வரும்’’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கும் போது அரச அதிகாரிகள் எந்தளவிற்கு யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்ற கேள்வியே எழுந்துள்ளது.

ஏனெனில், பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எதுவித முயற்சிகளையும், தற்பொழுது மேற்கொள்வதாக இல்லை. இராணுவத் தீர்வு காண்பதில் மட்டுமே முனைப்பாக ஈடுபட்டுவருகின்றது. அதிலும் இராணுவம் வெற்றிபெறும் என எண்ணும் சிறிலங்கா அரசு தேசிய இன விடுதலைப் போராட்டம் ஒன்றை இராணுவத்தால் தோற்கடிக்க முடியாது என்னும் உலக அனுபவத்தை மறந்துள்ளதுபோல் தெரிகின்றது.

இந்நிலையில், திரு. பிரேமதாசா கூறும் புராணக்கதைகள் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வராது என்பது ஒருபுறம் இருக்க, அரசாங்க அதிகாரிகளும் அரசியல் வாதிகள் போன்று மக்களை வழிநடத்திச் செல்ல முற்பட்டுள்ளமை பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகும். ஆகையினால், அரசியல்வாதிகளை விடுத்து அதிகாரிகளாவது நாட்டின் இன்றைய நிலையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுதே மக்கள் பிரச்சினையைப் புரிந்துகொண்டு அதற்கு தீர்வுகாண முற்படலாம். இல்லையேல் ‘காலம் கடந்த கதை’ களை மக்கள் காலம் காலமாக கேட்டுக் கொண்டே இருக்க வேண்டியே வரும்.

---

ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஜெயவர்த்தனா அரசியலில் பிரவேசித்து 50 வருட பூர்த்தி விழா அண்மையில் களனியில் நடைபெற்றது.

திக்கு புத்தூக்கமளித்தவர் என்றும், அவரால் அறிமுகப் படுத்தப்பட்டபொருளாதாரக் கொள்கையையே அறிமுகப் படுத்துகின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

## நட்டஈடு வழங்க ரெரியாவிற்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத இடங்களுக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படக் கூடாது என ரெரியா நிறுவனத்திற்கு பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நட்டஈடு வழங்கினால் மீண்டும் அங்கு நட்டஈடு வழங்கும் சூழ்நிலை உருவாகலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்ற சங்கத்தின் 9 ஊழியர்களுக்கு சங்கத்திற்கு ஆற்றியசேவையைப் பாராட்டி சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்நலன் புரிச் சங்கத்தினர் நேற்று முன்தினம் சங்கத்தில் பாராட்டு விழா ஒன்றை நடத்தினர். (86)

### வெளியீடு

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ‘‘நாவுக்கரசன்’’ என்னும் பெயருடைய கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

---

வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு லயன்ஸ் கழகத்தின் சார்பில் அதன்வட

### புலமைப்பரிசில் சித்தி

யாழ்.மண்டைதீவு மகாவித்தியாலய மாணவி சிவபரஞ்சோதி நிசாந்திஎன்பவர் 1991 ஆம் ஆண்டு விசேட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி 136 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பெற்றுள்ளார்.

---

சாலை நோயாளார் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகப் பொறுப் பாளரிடம் சம்பிரதா பூர்வமாக இவ் வண்டியை கையளித்தார்.

### சேவை பாராட்டு

(தென்மராட்சி)

கச்சாய் உபதபாலகத்தில் தபாலக அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ம. சின்னையா அவர்களுக்கு அண்மையில் கொடிகாமம் தபாலகத்தில் தபாலக அதிபர் திரு. க. ஞானலிங்கம் தலைமையில் அவரதுசேவையைப் பாராட்டி சேவை நலன் பாராட்டுவிழா இடம்பெற்றது. (86)

---

## லண்டனில் ஒரே நாளில் மூன்று குண்டு வெடிப்புகள்

ஒருவர் பலி; 40பேர் காயம்

(லண்டன்)

கடந்த சனிக்கிழமைகாலை லண்டனின் மத்தியபகுதியில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் பலியானார். 40 பேர் காயமடைந்தனர். குண்டுவெடிப்பின் சத்தம் ஆறுமைல்களுக்கு கேட்டது. குண்டுவெடிப்பினால் இப்பகுதி பெரும் சேதம் அடைந்துள்ளது.

இதைத்தொடர்ந்து அன்று மாலை லண்டனில் இரு கார் குண்டுகளும் வெடித்தன. ஐ. ஆர். ஏ. போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் இரு டாக்ஸிகளை கடத்தி அவற்றில் ஒரு காரை ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸ் தலைமையகத்திற்கும், மற்றைய காரை பிரதமர் அலுவலகத்திற்கும் செலுத்துமாறு கட்டளையிட்ட பின்னர் கார்களிலிருந்து இறங்கிச்சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மிரண்ட இந்த இரு டாக்ஸி சாரதிகளும் தமது கார்களை இடைநடுவில் நிறுத்திவிட்டு ஓடிச்சென்று விட்டனர் எனக் கூறப்படுகிறது.

சிறிது நேரத்தில் இவர்களின் டாக்ஸிகளில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தன. ஒன்று லண்டன் ரயில் நிலையம் ஒன்றினருகிலும், மற்றையது வடலண்டனிலும் வெடித்தது. பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை, வட அயர்லாந்தில் கார் குண்டு வெடிப்புகளை நடத்தும் ஐ. ஆர்.ஏ. கிளர்ச்சியாளர்கள் இம்முறை முதற்தடவையாக லண்டனிலும் இத்தகைய தாக்குதலை நடத்தியுள்ளதாக. ஸ்கொட்லன்ட் யார்ட் புலனாய்வு பொலிஸின் தீவிரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவர் கொமாண்டர் டேவிட் ரொக்கர் குறிப்பிட்டார்.

## தேர்தலில் வெற்றி பெற அரசு எதனையும் செய்யும்

ஜே. வி. பி, தெரிவிப்பு

(லண்டன்)

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பிரேமதாசா அரசாங்கம் எதனையும் செய்யத்தயங்காது என்பதை லலித்அத்துலத்முதலியின் கொலை காட்டுவதாக ஜே. வி. பியின் லண்டன் கிளை அலுவலகம் அறிவித்துள்ளது.

தேர்தலில் வெற்றியீட்டுவதை மையமாக கொண்டே அரசாங்கம் செயற்பட்டுவருகிறது. இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலில் ஜே. வி. பி. போட்டியிடுவதில் அர்த்தமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜே வி.பி மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருப்பதை நம்பித் தேர்தலில் போட்டியிட முடியாது. அரசாங்கக் கட்சியைத் தவிர வேறெவரும் வெற்றிபெறப் போவதில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### ஷெல் தாக்குதலில் மயிரிழையில் தப்பினர்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அகமட் ஷா மசூத் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் ஷெல் தாக்குதல் ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினர். இவர்கள் பாவான் மாகாணத்தில் இராணுவ முகாம் ஒன்றிற்கு விஜயம் செய்த போதே இந்த ஷெல் முகாமிற்கு அருகில் வந்து வீழ்ந்தது

---

# விமான கடத்தல் முறியடிப்பு இந்தியாவின் நாடகமே

## காஷ்மீர் போராளி அமைப்பு அறிவிப்பு

(டில்லி)

புதுடில்லியிருந்து ஸ்ரீநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் கடத்தப்பட்டதும் அவ்விமானத்தை கடத்திய துப்பாக்கி நபர் இந்திய கறுப்புப்பூனை அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் இந்திய அரசாங்கம் திட்டமிட்டு நடத்திய நாடகமே என காஷ்மீர் தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல் முஜாகுதீன் தெரிதுள்ளது.

141 பயணிகளுடன் சென்ற போயிங் 747 இந்தியப் பயணிகள் விமானம் துப்பாக்கி நபர் ஒருவரால் கடத்தப்பட்டது. கடும் காயமடைந்தர்வபோல் கால்களில் பிளாஸ்டருடன் வந்த இவர் அதனுள் துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. விமானத்தை லாகூருக்கு செலுத்துமாறு விமானியை துப்பாக்கியை காட்டி மிரட்டி விமானத்தை அங்கு கொண்டு சென்றபோது லாகூரில் தரையிறங்க பாகிஸ்தான் அதிகாரிகள் மறுத்து விட்டனர். விமானம் பின்னர் பஞ்சாப் அமிர்தசரஸ் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. நேற்று முன்தினம் நள்ளிரவு விமானத்தினுள் திடீரென நுழைந்த பிரிகேடியர் மிஸ்ரா தலைமையிலான இந்திய கறுப்புப்பூனை அதிரடிப்படை துப்பாக்கி நபரை சுட்டுக்கொன்று பயணிகளை பாதுகாப்பாக விடுவித்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

எனினும் காலையில் விமானத்தினுள் ஏறிப்பார்த்த பத்திரிகையாளர்கள் துப்பாக்கி ஏந்திய கடத்தல்காரன் அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதை உறுதியாக்கும் வகையில் அங்கு இரத்தக்கறை ஏதும் காணப்படவில்லை எனக் கூறினர். பத்திரிகையாளர்களுக்கு சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட அக் கடத்தல்காரரின் சடலமும் காண்பிக்கப்படவில்லை.

முன்னதாக துப்பாக்கி நபரை அதிரடிப்படையினர் கைது செய்து விட்டதாக பஞ்சாப் பொலிஸ் அதிகாரிகள் அறிவித்ததும், பின்னர் இது மறுக்கப்பட்டு அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக படையினர் அறிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு ஹிஸ்புல் முஜாகுதீன்போராளிகளே காரணம் என இந்திய அரசு குற்றஞ்சாட்டிய போதிலும் இதை மறுத்துள்ள அவ்வமைப்பு பாகிஸ்தான்மீது வீண்பழியை ஏற்படுத்த இந்திய அரசு திட்டமிட்டு நடத்திய நாடகமே என குறிப்பிட்டுள்ளது

## குருஷேவ் மகனுக்கு அமெரிக்க பிரஜாவுரிமை

(நியூயோர்க்)

முன்னாள் சோவியத் தலைவர் குருஷேவ்வின் மகன் சேர்ஜி குருஷேவ் அமெரிக்க பிரஜையாகும் வாய்ப்பை பெற்றுள்ளார். இத்தகவலை நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்டுள்ளது.

பச்சைக்கார்ட் என அழைக்கப்படும் நிரந்தர பிரஜைக்கு அனுமதிக்கும் அட்டைகள் பொறியியலாளரும் அரசியல் மேதையுமான சேர்ஜி குருஷேவ்விற்கும் அவரது மனைவி வலன்டனாவுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சாட் நிக்ஸனின் உதவியுடனேயே இவர்களுக்கு அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க வாய்ப்பு கிட்டியது.

## 4 காங்கிரஸ் பிரமுகர்கள் கட்சியிலிருந்து நீக்கம்

(டில்லி)

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக 4 காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் ஐந்து வருடங்களுக்கு கட்சியிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளனர். கே. என். சிங், எம். எல். பத்திதார், நட்வர்சிங், திருமதி ஷீல் தீட்சித் ஆகியோரே இவ்வாறு நீக்கப்பட்டவர்களாவர்.

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்ட இவர்களிடம் அதற்கான விளக்கத்தைக் கோரியபோது அவர்களின் பதில் திருப்தி தராமையினால் இந் நால்வரும் நீக்கப்பட்டதாக காங்கிரஸ் கட்சி நடவடிக்கை குழுவின் தலைவர் கூறினார்.

ஈழநாதம்

# புலிகளின் தற்கொலை படை கொழும்பில் புகவில்லை

## லலித்கொலைக்குமுன் பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி சுட்டுக் கொல்லப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன் சிறிலங்காப் பொலிசார் கொழும்பில் விடுத்த அறிக்கையொன்றில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்பிரிவு எதுவும் கொழும்பில் ஊடுருவி இருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பிரிவு ஒன்று வங்கிகள், ஹோட்டல்கள், இராணுவ நிலைகள், மற்றும் இந்திய தூதுவரகம் போன்ற முக்கிய இலக்குகளை தாக்கும் நோக்குடன் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாக ராய்ட்டர் வெளியிட்டிருந்த செய்தியை மறுக்கும் நோக்குடன் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் மேலும் கொழும்பு நகரிலிருந்து ராய்ட்டர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட அநாமதேயக் கடிதத்தில், புலிகளின் ஊடுருவல் பற்றி பிரஸ் தாபிக்கப்பட்டிருந்த போதும், பொலிசாரின் புலனாய்வு அறிக்கைகளும், பாதுகாப்பு அமைச்சுத் தகவல்களும் புலிகளின் ஊடுருவல் இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளன என்றும், இது தொடர்பாக தேசிய புலனாய்வு பணியகம் உஷார்படுத்தப்பட்டு இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளாலி கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் வேளையில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது திடீரென விசைப்படகில் இருந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக தெரிய வருகின்றது. இதேவேளை கிளாலி, அல்லிப்பளை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கி தாக்குதல் இடம் பெற்றதாகவும் அறியப்படுகின்றது. அன்று காலை 8-30 மணியளவில் பளைப் பகுதிக்கு திடீரென வந்த புக்காரா விமானம் ஒன்று பச்சிளைப்பள்ளி பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது. [86]

## வருடாந்த கூட்டம்

(வடமராட்சி)

மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கத்தின் ஆறாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மே மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச.விசுவநாதன் தலைமையில் தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறும். (யோ)

## பலாலி ஷெல் வீச்சுக்கு மூவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் தெற்கு, மேற்கு பகுதியில் நேற்று நடந்த எறிகணைத்தாக்குதலுக்கு மூவர் படு காயமடைந்துள்ளார்கள்.

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து அகோர எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவ் எறிகணைகளில் இரண்டு அளவெட்டி வடக்கு கும்பிழாவளை பிள்ளையார் கோவிலடியிலும் காளி கோவிலடியிலும் வீழ்ந்து வெடித்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளார்கள். இதேவேளை இப்பகுதியில் இருந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டதாக தெரியவருகின்றது.

மேற்படி சம்பவத்தில் அருமைத்துரை ராஜசேகரம் [வயது 25), கணபதிப்பிள்ளை கண்மணி (வயது 32) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர் இவர்கள் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி மரமொன்றின் கீழே பாதுகாப்பு கருதி இருந்தபோதே மேற்படி எறிகணை மிக அருகில் வீழ்ந்து வெடித்துள்ளது இதேவேளை

ST. PATRICK'S COLLEGE

The school will reopen for the Trinity Term on

## வீர வணக்க கூட்டம்

[வடமராட்சி]

வடமராட்சிக் கோட்டத்தில் கடற்புலிகள் பிரதேசத்தைத் தவிர்ந்த பருத்தித்துறை வட்டத்தின் இதுவரை காலமும் 4ஆம் மாதத்தில் வீரச்சாவெய்திய 5 மாவீரர்களுக்கான வீர வணக்கக்கூட்டம் பொலிகண்டி சிற்றூர் பொறுப்பாளர் திரு. கி. கதிரவன் தலைமையில் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு புலோலிதெற்கு வடுவாவத்தை வீரபத்திரர் கோயிலடி முன்றலில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவுப் பேருரையும். கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [யோ]

# எவர் கொல்லப்பட்டாலும் எம்மீதே மக்கள் சந்தேகம்

## பிரேமதாசா கவலை

[கொழும்பு]

''அரசியல் தலைவர் எவர் கொல்லப்பட்டாலும் அதற்காக எமது கட்சியை மக்கள் சந்தேகிப்பது எனக்கு மிகவும் கவலையைத் தருகிறது'' என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நேற்று தெரிவித்தார்.

மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே பிரேமதாசா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மனிதர்களைப படுகொலை செய்வதில் தமது கட்சிக்கு நம்பிக்கை இல்லை எனினும் மக்கள் தம்மை சந்தேகிப்பது கவலையளிப்பதாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

''எமது கட்சி மனிதக் கொலைகளை மட்டுமல்ல மிருகங்களின் கொலையைக் கூட வன்மையாகக் கண்டிக்கிறது. ஐக்கியதேசியக்கட்சி வன்முறைகளை விரும்பாத கட்சி என்பதை உணர வேண்டும்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். கரையோரம் நோக்கி கடற்படை பீரங்கி தாக்கு

(குருநகர்)

நேற்று முன் தினம் இரவு 9-00 மணியளவில் சிறிலங்கா கடற்படையினர் குடாக்கடல் ஏரிப் பகுதிகளை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

பூநகரி-கல்முனைக்கும், மண்டைதீவுக்கும் இடையே கெழுத்துப்பிட்டி என்றழைக்கப்படும் இடத்திற்கு பீரங்கிப் படகில் வந்து ேசர்ந்த சிறிலங்கா கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பீரங்கிக் குண்டுகள் முகத்துவாரக் கட்டைப் பகுதியில் கடலில் வீழ்ந்து வெடித்தன. மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் தொழில்களைக் கைவிட்டுக் கரைவந்து சேர்ந்ததால் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 7000 தமிழ் அகதிகள் இலங்கைதிரும்ப இணக்கமாம்

(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் ஏழாயிரம் பேர் தாயகம் திரும்ப இணக்கம் தெரிவித்திருப்பதாக மாநில வருவாய்த்துறை முதன்மை ஆணையர் சி என். ராமதாஸ் கூறியுள்ளார்.

திருச்சி நகரில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இது தொடர்பாக புதுடில்லியில் இருக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் சென்னைக்கு வரவிருப்பதாகவும், இவ்விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருப்பதாகவும்குறிப்பிட்டார்

தமிழ்

அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இரவு 12-00 மணிக்கு முன்னர் இங்கு சடலம்எதுவும் இருக்கவில்லை. என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் கொலைச் சதிகாரரின் இரண்டாவது நடவடிக்கை இதுவாகும். எங்கோ இருந்த இளைஞனைக் கொலை செய்துவிட்டு இங்கே கொண்டுவந்து போட்டிருக்கலாம் என பலர் சந்தேகிக்கின்றனர்.

சயனைட் அருந்தியதாலும் துப்பாக்கிச் சூட்டினாலும் மரணம் சம்பவித்ததாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. ஒரு இளைஞனைப் பிடித்து சயனைட்டை உட்

இறந்த

படுத்திய சத்தியக் கடதாசி ஒன்று தம்மிடம் இருப்பதாகவும் அவர் தெரி[illegible]

கொலையாளி ரீ சேட் அணிந்திருந்தார் என்றும், ஆனால் சடலத்தில் சேட் அணிந்திருக்கக் காணப்படுகிறது என்றும். வைத்திய அறிக்கையிலிருந்து துப்பாக்கிச் சூட்டுக்குப் பின் உடலில் சயனைட்டு ஏற்றப்பட்டநிலையில் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த இளைஞனின் சடலத்திற்குக்கூட சயனைட் ஏற்றப்பட்டிருப்பதற்கான அறிகுறி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சடலத்தை

## பாடசாலை அதிபர் விசேட கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்றும் நாளையும் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது

இக்கலந்துரையாடலின் போது மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பி விநியோகம், பாடசாலைகளின் அசையும் அசையா சொத்துக்களின் விபரம், மாணவர் உணவு முத்திரை விநியோகம் மற்றும் மே தினம் விடையங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினருக்கான கலந்துரையாடல் இன்று மாலை 3மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திலும் நாளை காலை 9 30 மணிக்கு தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தினருக்கு றிபேக் கல்லூரி மண்டபத்திலும் நண்பகல் 2 மணிக்கு வேலாயுதம் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் வடமராட்சிக் கல்விக் கோட்டத்தினருக்குமான கலந்துரையாடல் நடைபெறவுள்ளன. மேற்படி கலந்துரையாடல்களில் அந்தந்தக் கோட்டத்திற்குட்பட்ட கொத்தணி, பாடசாலை அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

லலித்

னர்.

இக்கொலைக்கு வி[illegible]தலைப் புலிகளே காரணம் என சிறிலங்கா அரசு கூறியிருப்பது முற்றிலும் ஆதாரமற்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சபாரத்தினம் அன்னபூரணம்

மண்டைதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய திருமதி சபாரத்தினம் அன்னபூரணம் 25- 4-93-ல்காலமாகிவிட்டார். அன்னார் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் அமுதா, ஆனந்தி, ஒளிவண்ணன் (கண்ணன்), அனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னராஜாவின் அன்பு மாமியும் சீலன் சுசந்தினி, சுஜீபன் கவிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 26-4-93நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு 3 மணிக்கு எடுத்து செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
கா. சபாரத்தினம்

(சி/6504)

### திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா

கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கத்தின் ஆறாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மே மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச.விசுவநாதன் தலைமையில் தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறும். (யோ)


# ST. PATRICK'S COLLEGE

The school will reopen for the Trinity Term on Wednesday 28 April

***Rector***

(சி-6503)



UNIVERSITY OF JAFFNA

# TENDER NOTICE

Tenders are invited from Contractors registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD for

''Repairs to Hos'el at Jaffna Town - Stage - II''

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 1993 - 04 - 27 — 1993 - 04 - 30 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fee.

| | | |
|---|---|---|
| a) Refundable | Rs. | 2500/- |
| b) Non - Refundable | Rs. | 250/- |

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Perfected tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10.00 a.m. on 1993-05-18.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

REGISTRAR.

(சி 6477)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


வலிகாமம் தெற்கு, மேற்கு பகுதியில் நேற்று நடந்த எறிகணைத்தாக்குதலுக்கு மூவர் படு காயமடைந்துள்ளார்கள்.

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை வலிகாமம் தெற்கு. வலிகாமம் மேற்கு பகுதியை நோக்கி பலாலி இராணுவ

கணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவ் எறிகணைகளில் இரண்டு அளவெட்டி வடக்கு கும்பிழாவளை பிள்ளையார் கோவிலடியிலும் காளி கோவிலடியிலும் வீழ்ந்து வெடித்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளார்கள். இதேவேளை இப்பகுதியில் இருந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டதாக தெரியவருகின்றது.

மேற்படி சம்பவத்தில் அருமைத்துரை ராஜசேகரம் [வயது 25), கணபதிப்பிள்ளை கண்மணி (வயது 32) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர் இவர்கள் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி மரமொன்றின் கீழே பாதுகாப்பு கருதி இருந்தபோதே மேற்படி எறிகணை மிக அருகில் வீழ்ந்து வெடித்துள்ளது. இதேவேளை இவ்விடத்தில் நின்ற மற்றவர்கள் காயமெதுவுமின்றி தப்பியுள்ளார்கள் எனவும் தெரியவருகின்றது. படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை ஏழாலைப் பகுதிகளை நோக்கி பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன. இது வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார் இவரது பெயர் விபரம் கிடைக்கவில்லை.

[சி, 9. 11]

## உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைப் பந்தாட்டப் போட்டி (மூன்றாம் இடத்திற்கானது) இன்று பிற்பகல் 3-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் அளவெட்டி விநாயகர் வி. கழகத்தை எதிர்த்து குருநகர் பாரதி விளையாட்டுக்கழகமும், குருநகர் சென்றோக் வி. கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி வி. கழகமும் விளையாடுகின்றன.

கூறியுள்ளார்.

## தமிழ்

அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இரவு 12-00 மணிக்கு முன்னர் இங்கு சடலம் எதுவும் இருக்கவில்லை. என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் கொலைச் சதிகாரரின் இரண்டாவது நடவடிக்கை இதுவாகும். எங்கோ இருந்த இளைஞனைக் கொலை செய்துவிட்டு இங்கே கொண்டுவந்து போட்டிருக்கலாம் என பலர் சந்தேகிக்கின்றனர்.

சயனைட் அருந்தியதாலும் துப்பாக்கிச் சூட்டினாலும் மரணம் சம்பவித்ததாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. ஒரு இளைஞனைப் பிடித்து சயனைட்டை உட்செலுத்தி துப்யாக்கியால் சுட்டுக்கொல்ல சதிகாரர்களால் முடியும்.

அடையாள அட்டை விவகாரமும் அப்படியே கடற்படைத் தளபதி கிளான்சி பர்னான்டோ கொல்லப்பட்டபோது சந்தேகநபரின் உடல் சிதைந்த நிலையில் அடையாள அட்டைமட்டும் சிதைவுறாமல் மிஞ்சியது ஒரு புதுமையான நிகழ்ச்சி விடுதலைப்புலிகள் எல்லா இடமும் அடையாள அட்டையை கையுடன் கொண்டுசெல்வார்களா என மக்கள் கேட்கின்றனர். இப்பொழுது கிடைத்தது இறந்தவரின் அடையாள அட்டை என கூறமுடியாது போலி அடையாள அட்டை ஒன்றை தயாரித்து இறந்தவர் அருகில் போடலாம்.

குறைந்த தொகைப் பணத்துடன் இங்கு போலி அடையாள அட்டை தயாரிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

## மக்கள்

உடனடியாக பதவி விலக செய்ய வேண்டும் என்றும் பாரிய அளவில் நெருக்கடிகளை உண்டு பண்ண வேண்டும் என்றார்.


# புதுக்கடைத் திறப்பு விழா

நிகழும் ஸ்ரீமுக வருசம் (26 - 04 93)
திங்கட்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு வரும்
சுபவேளையில்

## கண்ணன் ஸ்ரேரர்ஸ்

339, பாங்சல் வீதி, யாழ்ப்பாணம்

எனும் பலசரக்குக்கடை திறந்து வைக்கப்படும்.
இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

கா. ரவீந்திரன்

[4761]


பேச்சுவார்த்தை நடத்தப்பட இருப்பதாகவும்குறிப்பிட்டார்

## இறந்த

படுத்திய சத்தியக் கடதாசி ஒன்று தம்மிடம் இருப்பதாகவும் அவர் தெரிவி[illegible]

கொலையாளி ரீ சேட் அணிந்திருந்தார் என்றும், ஆனால் சடலத்தில் சேட் அணிந்திருக்கக் காணப்படுகிறது என்றும். வைத்திய அறிக்கையிலிருந்து துப்பாக்கிச் சூட்டுக்குப் பின் உடலில் சயனைட்டு ஏற்றப்பட்ட நிலையில் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த இளைஞனின் சடலத்திற்குக்கூட சயனைட் ஏற்றப்பட்டிருப்பதற்கான அறிகுறி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சடலத்தை அடையாளம் காட்டியதாகக் கூறப்படும் ஏ.ஜே பிரேமதாச பி.பி.சி.க்குத்தெரிவிக்கையில்;

''சடலத்தைப் பார்த்தது உண்மை. ஆனால் நான் அடையாளம் காட்டவில்லை. அதேவேளை சுட்டவர் நடுத்தரமுடையவர். ஆனால் சடலம் உயர்ந்த ஒருவருடையதாக இருந்தது எனத் தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படும் தமிழ் இளைஞர் அப்பையாபாலகிருஷ்ணனுக்கு விடுதலைப் புலிகளுடன் எத்தகைய தொடர்பு இருந்தது என்பதையோ, அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருக்கிறது என்பதைப் பொலிசார் எப்படிக் கண்டறிந்தனர் என்பதையோநேற்று கொழும்பில் அரசு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை என்று பி.பி.சி தெரிவித்தது.

இக்கொலைக்கு முழுச் சந்தேகமும் ஐக்கியதேசியக் கட்சியிலேயே இருக்கின்றது. இதேவேளை இக்கட்சியே இக்கொலைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டுமென லலித் அத்துலத்முதலியின் உறவினர் ஒருவர் மரண விசாரணையின் போது தெரிவித்தார்.

## சடலமாக

த்திய சட்ட மருத்துவ அதிகாரி கூறியுள்ளார்.

இதனிடையே லலித்தின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இறந்த இளைஞர் காயங்களுக்குள்ளானதாக பொலிஸ் மாஅதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

## மக்கள் வங்கி

அரசாங்க வங்கிகள் வடக்கு கிழக்கில் வாடிக்கையாளர்களையும் ஊழியர்களையும் தொடர்ந்து புறக்கணித்து வருகின்ற போதிலும் இங்கு உள்ள உயர் அதிகாரிகள் நிர்வாகத்திற்கு தமது ஒத்தாசைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# அன்னபூரணம்

மண்டைதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய திருமதி சபாரத்தினம் அன்னபூரணம் 25- 4-93-ல்காலமாகிவிட்டார். அன்னார் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் அமுதா, ஆனந்தி, ஒளிவண்ணன் (கண்ணன்), அனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னராஜாவின் அன்பு மாமியும் சீலன் சுசந்தினி, சுஜீபன் கவிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 26-4-93நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு 3 மணிக்கு எடுத்து செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
கா. சபாரத்தினம்

(சி/6504)

# திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா

செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா அவர்கள் 25 4-93ல் காலமானார். அன்னார் காலம்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், முருகையா, (இளைப்பாறிய மின் அலுவலர்) கனகலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், பகவதி, காலஞ்சென்ற நல்லதம்பி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவசம்பு, பொன்னம்பலம் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-04-93) பி ப. 2-00 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலய அருகில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்' இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்

நன்றி

தகவல்:
மணி
ஆசிரியர்

(4762)

# உள் வந்த வெளிச்சென்ற வகன இலக்கங்கள்

## 24-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9129

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1019, 26-3962, 24-3258, 27-9756, 40-7299. 41-9041, 28-1553. 27-5077. 28-0732, 24-9549, 28-9449, 42-1178, 28-2342 24-3663.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-2056, 26-5281.

## 25-04-93

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 9174

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3882, 26 2786, 42-2432, 26-0736, 28-1414, 24-1685, 24-9676, 24-5418, 26-1602, 26-4396, 26-5046, 24-6646, 28-0159, 26-3321, 22-6897, 24-5092.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1583, 28-5862, 22-1647, 24-5496, 26-0560, 26-6796, 24-9490, 41-9396, 42-3726, 42-3267, 24-6280, 40-9188, 42-0266, 28-3306, 42-3815, 28-9927, 27-6579, 24-2680, 28-4550, 24 5015, 26-4429, 24-5967, 26-7546, 24-5140, 26-1735.